# மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் இயற்கைச் சந்தை!

## நுங்கம்பாக்கம் - அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெறுகிறது!

சென்னை, மே 18–

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரப் பகுதியில் விற்பனை செய்ய ஏதுவாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் மாத முதல் வார சனி, ஞாயிறு மற்றும் மாதத்தின் மூன்றாம் வார சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் இயற்கைச் சந்தை (Natural Bazaar) நடத்தப்படுகிறது. இம்மாதம் 17.05.2025 (சனிக்கிழமை) மற்றும் 18.05.2025 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் இயற்கை சந்தை நடைபெறுகிறது.

இந்த இயற்கைச் சந்தையில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை சார்ந்த பொருட்களான பாரம்பரிய அரிசிகள், சிறுதானியங்கள் மற்றும் சிறுதானிய மதிப்புக் கூட்டுப் பொருட்கள், காய்கறிகள், கீரைகள், பழ வகைகள், பனை ஓலைப் பொருட்கள் போன்ற இயற்கையுடன் சார்ந்த பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் இந்த இயற்கைச் சந்தையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களால் தயார் செய்யப்படும் பல்சுவை உணவுப் பொருட்களும் கிடைக்கும்.

எனவே பொதுமக்கள் அனைவரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் இயற்கை சந்தையைப் பார்வையிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான உற்பத்திப் பொருட்களை வாங்கி மகிழ அன்புடன் அழைக்கின்றது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

# ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் நேற்று தொடங்கியது!

பெங்களூரு, மே 18–

போர் பதற்றம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் நேற்று முதல் மீண்டும் தொடங்கியது. பெங்களூருவில் நடைபெற உள்ள ஆட்டத்தில் ஆர்சிபி கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வந்த நிலையில், இந்தியா பாகிஸ்தான் போர் பதற்றம் காரணமாக மே 8 ஆம் தேதி பஞ்சாப், டெல்லி இடையிலான போட்டி பாதியில் நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து ஐ.பி.எல். போட்டிகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டன. தற்போது போர் பதற்றம் தணிந்துள்ள நிலையில், மிஞ்சியுள்ள ஐ.பி.எல். போட்டிகளின் அட்டவணைகள் மாற்றப்பட்டு வெளியிடப்பட்டன. அதன்படி, நேற்று முதல் ஐ.பி.எல். போட்டிகள் தொடங்குகியது. பெங்களூரு மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை, ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு எதிர்கொண்டது.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க ஜுன் 1ஆம் தேதி மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நாடே போற்றும் வகையில் நடைபெற உள்ள கழக மாநில பொதுக்குழு கூட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகளை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, கழக மண்டல பொறுப்பாளர், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், இளைஞரணி மாநில துணை செயலாளர் ஜி.பி.ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் பாண்டி மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### வருகிற 23ஆம் தேதி

# மதுரை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் !

## மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, மே 18-

வரும் ஜுன் 1ஆம் தேதி மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நடைபெற உள்ள மாநில பொதுக்குழு கூட்டத்தில் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க வருகை தருவதையொட்டி சிறப்பான வரவேற்பு கொடுப்பது, விழாவை எழுச்சியுடன் சிறப்பாக நடத்துவது, கழக ஆக்கப் பணிகள் குறித்த மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் வருகிற 23ஆம் தேதி நடைபெற உள்ளதாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு. மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்,





அதன் விபரம் வருமாறு:-

நாடே போற்றும் வகையில் தமிழ்நாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கழக மாநில பொதுக்குழு கூட்டம் வருகிற ஜுன் 1ம் தேதி எழுச்சியுடன் மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்த சிறப்புமிக்க பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வர உள்ளார்.

வரலாறு படைக்க வருகை தரும் கழகத் தலைவரை எழுச்சியுடன் வரவேற்று, வரலாறு படைக்கும் வகையில் பொதுக்குழு கூட்டம் நடத்துவது குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் வரும் 23.05.2025 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மதுரை உத்தங்குடியில் அமைந்துள்ள கலைஞர் திடலில் நடைபெற உள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த சிறப்புமிக்க செயல்வீரர்கள் கூட்டத்திற்கு மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக, கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### டி.அண்ணாதுரை - ஜி.ராஜா வரவேற்புரையில்

# நல்லூர் வடக்கு ஒன்றியம் மாரிமுத்தாள் குணா இல்லத் திருமணம்!

## அமைச்சர் சி.வி.கணேசன் நடத்தி வைக்கிறார்!

கடலூர், மே 18–

முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின், கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நல்வாழ்த்துக்களுடன் கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் ஒன்றியத் துணை செயலாளர் திருமதி. மாரிமுத்தாள் நாரையூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கனல். குணசேகரன் ஆகியோரின் மகள் ஜி.சுமித்ரா (சென்னை உயர் நீதிமன்றம்) என்ற கன்னிகைக்கும் மதுரை மாவட்டம் கே.புதூர் அ.சுந்தரம் விஜயா ஆகியோரின் மகன் எஸ்.தமிழ்ச்செல்வன் என்கிற வரனுக்கும் திருமணம் இன்று (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு மேல் 9.00 மணிக்குள் வேப்பூர் கூட்ரோடு லேனா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமணத்தை கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.



இத்திருமணத்திற்கு நல்லூர் வடக்கு ஒன்றியத் துணை செயலாளர் பூலாம்பாடி டி.அண்ணாதுரை, முன்னாள் ஒன்றிய பொருளாளர் ஜி. ராஜா வரவேற்புரையாற்றுகின்றனர்.

எம்.பழனி முத்து, கோ,பாக்கியராஜ், முன்னாள் மாவட்ட இணைஞரணி அமைப்பாளர் துரை.கருப்புசாமி, வீர.திராவிடமணி, சி.கணேசமூர்த்தி, கே.மங்காபிள்ளை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை. கோவிந்தசாமி விருத்தாசலம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சுபா.சந்திரசேகர், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன், கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணுபிரசாத் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர். இராதாகிருஷ்ணன் மாநில பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி. முத்துக்குமார் மாநில கலை இலக்கிய பேரவை துணைச் செயலாளர் வி.டி.கலைச்செல்வன் மாநில துணைத் தலைவர் ஆதி திராவிட நல வாரியம் சி.வெ.இமயம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேசன், உளுந்தூர் பேட்டை நகரமன்றத் தலைவர் கே. திருநாவுக்கரசு, விருத்தாசலம் நகர மன்றத் தலைவர் சங்கவி முருகதாஸ், விருத்தாசலம் நகர செயலாளர் க. தண்டபாணி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ்.கணேஷ்குமார், ஜெயின் ஜுவல்லரி உரிமையாளர் எம்.அகர்சாந்த், விருத்தாசலம் ஒன்றிய கழக செயலாளர் கனக. கோவிந்தசாமி தி.வேல்முருகன் கோட்டேரி சுரேஷ், தங்க. நாராயணசாமி, சி.சக்திவினாயகம், மங்களூர் ஒன்றிய செயலாளர்கள் அடரி. சின்னசாமி, பட்டூர். வீர. அமிர்தலிங்கம், பா. செங்குட்டுவன், கே.எம்.டி.சுகுணா சங்கர், செல்வி ராஜரத்தினம், வி.பி.பி.பரமகுரு, கோனூர் மதியழகன், டி. தண்டபாணி, சன். அன்பழகன், பாண்டுரங்கன், ஆர்.ஜானகி, பி.செந்தில் குமார், மு.கருணாநிதி, எம். கே.அருள் குமார், வீரபாண்டியன், அரங்க. பாலகிருஷ்ணன், வெண்ணிலா கோதண்டன், வயலூர். கிருஷ்ணமூர்த்தி, எஸ். ராமு, எஸ். செல்லையா,

ஆர். மதியழகன், நீதிவள்ளல், ராஜ்குமார், அய்யாயிரம், பிரதீப், க. மணிசேகர், பி. மும்மூர்த்தி, எம்.பழனிவேல், ஏ. விசுவநாதன், எம்.முத்துக்கருப்பன், சி.தெய்வசிகாமணி, எஸ். விடுதலைவளவன், எஸ்.சுரேஷ் குமார், ஆர். கதிர்வேல் பி.கே. டி.சண்முகராஜ், எம்.ராமலிங்கம், ஆர்.சசிகுமார், எ.சந்திரன், நல்லூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் பால். கருப்பையா, ஜி. வெங்கடாசலம், பொன்.அண்ணாதுரை, எ.சேகர், எ.அன்புகுமரன், ராமதாஸ், எஸ். ஜெயராமன், முன்னால் ஒன்றியகவுன்சிலர்கள் முத்துக்கண்ணு, மோகன்ராஜ், சோலைராஜன், ஜெயசுதா வீரமுத்து, தனலட்சுமி வெங்கடேசன், ஏ. மனோகரன், ஏழுமலை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் தனசேகர், ஏ.பாபு, முரசொலி.வி. குணசேகரன், டி. ராஜா, எ. செல்வம், எம். சூர்யா, வி. சாக்ரடீஸ் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் எ.கருணாநிதி, சுப்பு.அன்பழகன்,கே. ரகுநாதன், கே.ராஜேஷ்வரி, இந்துமதி, ராஜகுமாரி கணேசன், பி.என். பன்னீர் செல்வம், எ.தனசேகரன், பி. சசிகுமார், கே. ராஜீவ்காந்தி, டி. ஜெயபால், ஏ. ராஜா, கலைஞர்அரசி, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் எஸ்.பி.எஸ். வேல்முருகன், என்.நாகேஷ், கே. கதிர்வேல், அரிஈசன், பி. செந்தில்குமார், ஏ.பெருமாள், பி.மணிகண்டன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

நாரையூர் கிளை கழக செயலாளர் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் கனல் குணா நன்றியுரையாற்றுகிறார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியம், கெங்கராம்பாளையம் ஊராட்சி, கரைமேடு பகுதியில், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய நியாயவிலைக் கடை கட்டிடத்தை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் வி.ஜி.பிரபாகரன், ஆர்.எஸ்.வாசன், ப.அன்பரசு, ஐயனார், ராஜாமணி, செல்வகுமரன், சுந்தரமூர்த்தி, ராஜசேகர், குமணன், ராமநாதன், கௌரி, அருள் பிரகாஷ், ஆனந்தராஜ், வெங்கடேசன், வெங்கடாஜலபதி, தயாளன், முத்துசாமி, தீர்த்தமலை, புரூஸ்லீ மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 2 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

சென்னை வடகிழக்கு, தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ரயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பகவிநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 15-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி